[3rd February 1966

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு ரயில் வசதி தேவையில்லை. அங்கேயே ஸ்மெல்ட்டர் போட்டு எடுத்துக்கொள்ளலாம். அங்கே ரயில் வேண்டும் என்பதற்கு இந்தக் காரணத்தைக் காட்ட வேண்டியதில்லை. வேறு ஏதாவது காரணம் காட்டிக் கொள்ளலாம்.

** 68 கேள்வி.*—**திரு. இராம. அரங்கண்ணல் :** *கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—*

மாமண்டூரில் (கள்ளக்குறிச்சி தாலுக்கா) 10 லட்சம் டன் Zinc கிடைக்கும் என்கிற ஆராய்ச்சியின் முடிவு என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : A reliable assessment of the multi-mineral deposit of copper, lead and zinc located near Mamandur village can be had only after a more intensive survey and prospecting is done.

சிவகங்கையில் நூற்பு ஆலை

** 69 கேள்வி.*—**திரு. கரு. சீமைச்சாமி :** *கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

சிவகெங்கையில் ஆரம்பிக்க இருக்கும் நூற்பு ஆலை எந்நிலையிலுள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : லைசென்ஸ்தார் அந்த நூற்பு ஆலையை நிறுவுவதற்கான முயற்சிகள் எடுத்து வருகிறார்.

திருமதி அ. கிருஷ்ணவேணி : கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய ஆண்டிப்பட்டி தொகுதியைச் சேர்ந்த வருச நாட்டு ஏரியாவில் ஏராளமான பருத்தி சாகுபடி செய்கிறார்கள். சாகுபடியாகக் கூடிய பருத்திகள் எல்லாம் வெளியூர்களுக்கு ஏற்றுமதியாகிச் செல்லுகிறது. மேற்படி வட்டாரத்தில் உள்ள ஏழை மக்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் பின் அடைந்திருக்கிறார்கள். மேலும் ஆண்டிப்பட்டியில் ஒரு கூட்டுறவு ஆலை கட்டுவதற்குப் பங்குத் தொகை கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். ஆகையால் தயவு செய்து இந்த ஆண்டு ஆண்டிப்பட்டியில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை ஏற்படுத்த அமைச்சர் அவர்களுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்தில் இப்போது அமைக்கப்பட்டிருக்கிற மில்களுக்கு போதிய பருத்தி நம் ராஜ்யத்திலேயே உற்பத்தி ஆவதில்லை. வெளி ராஜ்யங்களிலிருந்து கொண்டு வருகிறோம். ஆண்டிப்பட்டிக்கு ஒரு மில் வேண்டுமென்று சொன்னால், அதைப் பற்றித் தனியாக எழுதி அனுப்பினால், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏதாவது வழி இருக்கிறதா என்று பரிசீலனை செய்ய முடியும்.